INFORMATION / NEWS / TECHNICAL / ARTICLES / ACHIEVEMENTS

# WINDCARE Chronicle

**Web:**
www.windcareindia.com

**Mail:**
chronicle@windcareindia.com

Praise the Lord

OCTOBER 05, 2008

*Reaching you with News drops!*

VOLUME 02, ISSUE 09

## நமது சிந்தனைக்கு

நேர்கோட்டுச் சிந்தனை என்பது ஒரு பிரச்சனையை குறிப்பிட்ட வரையரைக்குள் தீர்க்க நினைப்பது. ஒரு ஊரை கடக்க உயரமான குச்சி (கழி) ஒன்றோடு ஒருவர் வருகிறார். ஊரின் வாயில் கதவு உயரமான குச்சியை இடித்தது. அதை இரண்டாக வெட்டித்தான் கொன்டுபோக முடியும் என முடிவுக்கு வந்தார். இது ஒரு நேர்கோடான சிந்தனை. அந்த குச்சியை சரித்து எடுத்துச் சென்றிருந்தால், எவ்வளவுபெரிய உயரத்தையும் எளிதில் எடுத்துச் சென்றிருக்கலாம்.

சற்று வெளியில் நின்று சகல சாத்தியக் கூறுகளையும் ஆராயும் போது கடிவாளப் பார்வையிலிருந்து விடுபட்டு கழுகுப் பார்வையை நாம் அடைய முடியும்... உழைப்பவர்களுக்கு... உங்களுக்கு கழுகுப்பார்வை வேண்டும். வேண்டுமா ?

வேதாகமம் கூறுகிறது. ‘வெள்ளியைப் பார்க்கிலும் என் புத்தியையும், பசும்பொன்னைப் பார்க்கிலும் ஞானத்தையும் அங்கீகரித்துக் கொள்ளுங்கள்’ நீதிமொழிகள் 8-10.

இறைவன் உங்களோடு இடைபடுவதன் மூலம் இது நிச்சயம் கிடைக்கும். இதன் மூலம் தன்னடக்கம் வரும், நாம் செய்யும் வேலைகளில் திறமையாக செயல்படலாம்.

அண்ணன் தம்பி இருவரும் இரட்டையர்கள். தம்பி அண்ணனுக்கு இருநாள் முன்பாக பிறந்த நாள் கொண்டாடுகிறான். இது எப்படி சாத்தியம்? உங்கள் கழுகுப் பார்வையை விடையாக அனுப்புங்கள்.. சரியான பார்வைக்கு ஒரு சபாஷ் உண்டு...

**Courtesy: World Light Service Mission**

## SPECIAL POINTS

- Vestas 750-KW Gearbox work done by without Crane Technology.
- SUZLON 1MW Gearbox work done at Maharastra.
- SUZLON 1.25MW Rotor Trial work done in Tamil Nadu.
- BONUS WTG's Gearbox work done by without Crane.
- Tenkasi & Kavalkinaru review Meeting.
- Personality Development — New Article.

## அன்புக்குரியவர்களே...

இந்த மாத இதழ் வழியாக புதிய வெற்றிகளோடு உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி, ஆம் SUZLON 1 MW Gearbox மற்றும் நீண்ட நாட்களாக எதிர்பார்த்த Vestas 750 KW Gearbox ஆகிய வேலைகளை நமது Without Crane Technology முறையில் நமது சகோதரர்கள் வெற்றிகரமாக முடித்துள்ளனர். மேலும் SUZLON 1.25-MW ROTOR unit Dismantling & Re erection பணிக்கான முதற்கட்ட பணிகள் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளது.

ஆம் சகோதரர்களே இவை அனைத்தும் புதிய வாய்ப்புகளை நமது நிறுவனத்திற்கு பெற்றுத் தந்துள்ளது. மேலும் நமது வாடிக்கையாளர்கள் நம்மிடம் நாம் இதுவரை அளித்திட்ட செயல்பாட்டினை விட மேலாக செயல்பட முடியும் என்னும் எதிர்பார்ப்பு உள்ளது.

சிறப்பான தகவல் பரிமாற்றம், அன்றாட பணிகளின் தகவல் பதிவு, ஒருங்கிணைப்பு, திட்டமிடுதல் மற்றும் திறனாய்வு ஆகியவற்றின் மூலமாக நமது வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றி இலக்கை அடைவோம், வாழ்த்துக்களுடன்...

**S. Antonyraj - Chief Executive.**

## Our Services

Without Crane Technology

Wind park Operation

Maintenance & Services

Service Centre

Turnkey Project

Developers

Consultancy Service

## Our Vision

To ensure our customers receive a satisfactory services from a number one service provider.

Enhance the contribution of our services to the global market and provide continuous support to the global efforts in attaining energy Independence.

# SUZLON 1-MW

## Without Crane Job in Maharastra...

*We remember at this moment the Design team, Fabrication team, Trial team and almost all the teams who worked together behind this job of De erecting the Gearbox from the SUZLON make I000-KW wind turbine at SUPA site in Maharastra state on 19th September 2008.*



**PRIZE**
For your Talent

Best Wind Turbine's Maintenance என்னும் தலைப்பில் நீவீா் அறிந்த தகவல்களை வரவேற்கிறோம். மிகச்சிறந்த தகவல்களுக்கு ரூ.1000 காசோலை மற்றும் சான்றிதழ் வழங்கப்படும். அக்டோபா் 20–க்குள் சமா்ப்பிக்க வேண்டும்.

**Edited By: P. Jebastin**
+91-94422 68143

## Review Meetings……



கடந்த 12 மற்றும் 12ம் தேதியில் தென்காசி மற்றும் காவல்கிணறு பணித்தளங்களில் சிறப்பு கலந்தாய்வுகூடுகை நடைபெற்றது.

செப். 12, தென்காசி-ல் காலை 11.30 மணிக்கு ஒரு பகுதியாகவும் மாலை 5.00 மணிக்கு இரண்டாவது பகுதியா கவும் அனைத்து பணியாளர்களுடன் நேரடியாக கலந்தாய்வு நடைபெற்றது. நமது நிறுவனம் டெல்லியில் கலந்து கொண்ட இன்டர்நேஷனல் கண்காட்சி பற்றிய படங்கள் மற்றும் உலக நாடுகளின் பார்வையில் நமது நிறுவனம் மேலான இடத்தை பெற்றிருப்பதை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது. மேலும் அதற்கேற்ற வண்ணமாக உண்மையாகவும், பாதுகாப்புடனும், சிறப்பாக செயல்பட வேண்டிய அவசியத்தைக் குறித்தும் நமது நிர்வாக இயக்குனர் திரு S. அந்தோனிராஜ் அவர்கள் தனது அனுபவங்களை ஆலோசனை வாயிலாக பகிர்ந்து கொன்டார். திரு. K. பான்டி திரு. P. ஜெபஸ்டின் மற்றும் T. பிரபு உட்பட சுமார் 60-க்கும் மேற்பட்டோர் கலந்து கொன்டனர். அனைவருக்கும் வளாகத்தில் உணவு சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.





செப். 13, காவல்கிணறு அலுவலகத்தில் சுமார் 3.00 மணிக்கு மேற்குறிப்பட்ட வண்ணமாக கலந்தாய்வு நடைபெற்றது. இறுதியில் நமது நிர்வாக இயக்குனர் திரு S. அந்தோனிராஜ், மற்றும் திரு. ரமேஷ்பாபு, திரு. திருவாளி மார்பன் திரு. அல்போன்ஸ் உள்ளிட்ட குழுவினர் அந்த பணித்தள மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றிய ஆலோசனைகள் வாயிலாக திட்டமிட்டு அவற்றை செயல்படுத்த ஆர்வமாக உறுதியளித்தனர்.



# Trial for SUZLON Biggest Milestone…

**SUZLON 1.25-MW Rotor unit** (Nearly 30 ton) Dismantling & re erection work வருகிற மாதம் மஹாராஸ்டிராவில் நடைபெற உள்ளது. நமது குழுவினர் வெற்றிகரமாக Trial work -ஐ தேவநல்லூர் பணித்தளத்தில் 29-09-08 ல் முடித்துள்ளனர் ஒவ்வொருவரின் கடின உழைப்பையும் நிர்வாகம் பாராட்டுகிறது. உலக அளவில் முதன்முறையாக 25 டன்-க்கு மேற்பட்ட பணியில் செயல்படுவது குறிப்பிடத்தக்கது.



# Vestas 750-KW

Without Crane Job in Andhra Pradesh.

We have successfully **DE ERECTED the GEARBOX from Vestas 750-KW Wind Turbine at Tadapatri site (HCSL-6) for** the first time using the Manual Erection method on 19th Sep. 2008. நமது Executive V. Gothandapani தலைமையிலான (Chermaraja - Prakash) அணியினரின் கடின உழைப்பை நிர்வாகம் பாராட்டுகிறது.



# Personality Development…

Personality is our psychological behavior that affects the way handle people around us and the situations we encounter in life. You hear the term; he has a cool personality or he has a high temper personality. Both descriptions attempt to describe the person's interaction with people and situations.

In order to decide on the best way for personality development is to understand what determines our personality in general. In line with this site's way, we will avoid the theories and academic jargons.

Our Personality is decided by three main factors:

1. Heredity of our genes,
2. Our Environment,
3. The Situation we handle.

Let's us drill down a little bit

**Heredity of our genes** refers to how we were born. The genes we inherit from our biological parents play a big role in our personality and our personality development. Our physical facial attraction, gender, muscle, reflexes, energy levels, hair are all decided in the chromosomes of our genes.

**Our Environment,** It is not surprising that the cultures that we grow within play a big role in our personality and personality development. Think of yourself as an example. If you grow in a religion related culture, your principles in life would be different to a person who grows up in an non-religious culture. Your principles, ideology and way of dealing with other might follow what your religion teaches you.

This is different if religion is not part of your culture where you tend to gauge right and wrong based on other factors that are taught in religions. An interesting theory of personality development shows that the first born child in a family is more concerned with social acceptance, more ambitious, more hardworking, more cooperative, more dependent, more prone to guilt feelings, prone to anxiety, and less aggressive that the second and third child of the same family. This is another evidence of the effect of our environment on our personality development. You would also notice a certain behavior associated with certain cultures & nationalities.

***See you in next issue…***

No. 3/241-A, Four Road, Gudimangalam Post, Udumalpet - 642 201, CBE, Tel: + 91 4252 273840, Fax: 273915 E-mail: chronicle@windcareindia.com